# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.60/2021

DW4– பழனிவேல் நாள்.18.11.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

தாவா சொத்து இளவர் வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட கூட்டுக்குடும்பசொத்து என்றால் சரிதான். மேற்படி சொத்து சரவணக்குமார் என்பவருக்கு 18.10.2007ம்தேதி பாகப்பிரிவினை மூலம் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். 05.08.2019ம் தேதி சரவணக்குமார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். சரவணக்குமார் உடல்நிலை சரியில்லாமல் இறந்ததால் அவருக்கு ஏற்பட்ட மருத்துவசெலவிற்காகவும் மற்றும் குடும்ப கடன்களை தீர்ப்பதற்காகவும், என்னிடம் கடன் கேட்டு வந்தார்கள் என்றும், நான் கடனுக்கு ஆதரவாக கிரய ஒப்பந்தம் எழுதி வாங்கினேன் என்றால் சரியல்ல. 27.07.2021ம் தேதி ரூ.13.50லட்சத்திற்கு கிரய பேசி ரூ.10லட்சம் முன்பணமாக பெற்றுகொண்டார்கள் என்றால் கிரயத்திற்கு தான் வாங்கினேன். இப்படி எழுதிகொடுத்தால் தான் கடன் கொடுப்பேன் என்று நான் சொன்னதால் அவர்களுடைய குடும்ப சூழ்நிலையை கருதி அவர்கள் ஆவணம் எழுதிகொடுத்தார்கள் என்றால் சரியல்ல. அதன்பின்னிட்டு வாதிகளும், 1, 2 பிரதிவாதிகளும் சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு என்பெயருக்கு பட்டா, சிட்டா வரவில்லை என்றால் சரிதான். பாக்கி தொகையை பெற்றுக்கொண்டு கிரயம் எழுத வரவேண்டுமென்று நான் அவர்களுக்கு அறிவிப்பை அனுப்பினேன். நான் குறிப்பிட்ட தேதியில் சார்பதிவாளர் அலுவலகத்தில் தயாராக இருந்தேன் என்று காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் நோட்டீஸ் அனுப்பியுள்ளேன். சிங்காரவேல் தான் என்னை சொத்து வாங்குவது சம்மந்தமாக அழைத்துசென்றார். சிங்காரவேலிடமும் மற்றும் என்னிடமும் கடனாக தான் பணம் பெற்றுக்கொண்டார்கள் என்றும், அந்த பணத்தை வைத்து தான் பாப்பாத்திக்கு எழுதிகொடுத்த அடமானகடனை செலுத்தினார்கள் என்றால்

சரியல்ல. வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகள் தற்போதும் கடன் தொகையை செலுத்ததயாராக இருக்கிறார்கள் என்றும், நான் அதை பெற்றுக்கொண்டு சொத்தை திருப்பி தர கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது சொத்து மதிப்பு அதிகமாகிவிட்டதால் அதை திருப்பி கொடுக்க மறுக்கிறேன் என்றால் சரியல்ல. என்பெண்ணுக்கு திருமணம் செய்து கொடுத்ததால் தற்போது தாவா சொத்தில் நான் பயிர் செய்யவில்லை. நான் எந்த காலத்திலும் தாவாசொத்தை அனுபவம் செய்தது கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள மின்மோட்டாரின் HP எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அது தண்ணீருக்குள் உள்ளது. நான் அனுபவம் செய்திருந்தால் அந்த விவரம் எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. தாவாசொத்தில் விவசாயம் செய்வதற்கு வெண்பாவூர் தொடக்கவேளாண்மை வங்கியில் அவர்கள் விவசாய கடன் பெற்று விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நேரடியாக விவசாய நிலத்தின் அனுபவத்தை பார்த்துதான் தொடக்கவேளாண்மை வங்கி அதிகாரிகள் அவர்களுக்கு விவசாய கடன் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. என்னிடம் கடன் வாங்கிய பின்னரும் வாதிகள் விவசாயம் செய்து மகசூல் எடுத்துவருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவாசொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கடன் கொடுக்கும் போது தாவாசொத்தை இயந்திரங்களை கொண்டு சீர்செய்து பராமரிப்பு செய்துவிட்டு அந்த தொகையை கழித்துவிட்டு தான் மீதி தொகையை கடனாக கொடுத்தேன் என்றால் சரியல்ல. வாங்கிய கடனை கொடுத்துவிட்டு சொத்தை பெற்றுக்கொள்ளுங்கள் என்று வாதிகளிடம் நான் சொன்னது கிடையாது. வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகள் கடனை செலுத்த தயராக இருக்கிறார்கள் என்றும், அதனை நான் பெற்றுக்கொள்ளாமல் உதாசீன படுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.

<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1, 2 பிரதிவாதிகள் குடும்பத்தை பற்றி எனக்கு எப்போது முதல் தெரியும் என்றால் வாங்குவதற்கு ஒருமாதம் முன்பு இருந்து தெரியும். இளவர்களுக்கு பாட்டி

அல்லது அம்மா யார் வேண்டுமானாலும் காப்பாளராக இருக்கலாம் என்றால் சரியல்ல. அம்மா தான் இருக்கமுடியும். அம்மா இளவர்களுக்கு பாதகமான விசயம் செய்யும் போது பாட்டி காப்பாளராக இருக்கலாம் என்றால் சரியல்ல. இளவர்களுக்கு பாட்டி காப்பாளராக இருப்பது தவறு என்று நான் சாட்சியம் அளித்துள்ளது தவறு என்றால் சரியல்ல. நான் விவசாயம் செய்கிறேன். தற்போது வருடத்திற்கு சுமார் 3, 4 லட்சம் ரூபாய் வருமானம் வரும். எனக்கு 16 3/4 ஏக்கர் நிலம் உள்ளது. 16 3/4 ஏக்கரை கிரயம் பேசினேன். ஒரு ஏக்கர் என்ன விலைக்கு பேசினேன் என்றால் மொத்தமாக ரூ.13.50லட்சம் என்று பேசினேன். ஒருஏக்கர் என்ன விலை என்று நிர்ணயிக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் 16 3/4 ஏக்கர் ரூ.13.50லட்சத்திற்கு பேசினேன். நான் நிலத்தை விலைபேசவில்லை என்றும், எனக்கு பின்புலமாக இருந்தவர் கிரயம் பேசி உள்ளார் என்றும், நான் அவருக்கு பினாமி என்றால் சரியல்ல. நான் நிலத்தை விற்று வாங்கினேன். நான் நிலத்தை விற்றதற்கு ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய சாட்சியத்தில் பாரத ஸ்டேட் வங்கி மேலாளரிடம் போய் பேசியதாக கூறியுள்ளேன் என்றால் மூன்று பேரும் போய் பேசினோம். மேனேஜரை பார்த்து வாங்கிய கடனை குறைக்க வேண்டுமென்று பேசினேன். ரூ.41லட்சம் கட்ட சொன்னார்கள். பேரம்பேசி ரூ.7.5லட்சமாக குறைக்கப்பட்டது. எவ்வளவு தொகை வங்கியால் குறைக்க பட்டது என்று என்னால் கூறஇயலாது. நான் வங்கி போகவில்லை என்றும், குறைக்க சொல்லி கேட்கவில்லை என்றும் நான் போய் இருந்தால் எவ்வளவு தொகை குறைத்து பேசப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. எனக்கு பின்புலமாக இருக்கக்கூடிய வட்டிதொழில் மற்றும் ரியல்எஸ்டேட் செய்கின்ற வடிவேல் என்பவர் வங்கிக்கு சென்று தொகையை பேசி குறைத்தார் என்றால் சரியல்ல. எந்த வங்கி அதிகாரி என்னிடம் வந்து எப்போது சொத்து மதிப்பு குறைவாக உள்ளது என்று சொன்னார் என்றால் 04.03.2021ம் தேதிக்கு 2நாட்களுக்கு முன்பு என்னிடம் அவ்வாறு சொன்னார். வங்கிஅதிகாரி நான்

போய் கேட்டவுடன் குறைத்துவிட்டாரா என்றால் பேரம்பேசி குறைத்துவிட்டார். அவர்கள் கட்டும் சூழ்நிலையில் இல்லையென்று சொன்னேன். ஒரு வங்கி அதிகாரி ரூ.25லட்சத்திற்கு மேல் கடனை குறைக்க முடியாது என்றும், அவர் மேலாதிகாரியிடம் பேசிதான் குறைக்க முடியும் என்றும், நான் பேசியிருந்தால் இந்த விவரம்பற்றி எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. கடனை கட்டி முடித்தவுடன் சொத்து சம்மந்தமான ஆவணங்களை என்னிடம் கொடுத்தார்களா என்றால் நான் இருக்கும்போது கீதாவிடம் கொடுத்தார்கள். என்னுடைய சாட்சியத்தில் என்னிடம் கொடுத்ததாக தவறாக கூறியுள்ளேன் என்றால் கீதா முன்னிலையில் என்னிடம் கொடுத்தார்கள். தாவா நிலத்தில் மொத்தமாக முதலில் ரூ.12.50லட்சமும், மேற்கொண்டு கேட்டதால் ரூ.10லட்சமும் கொடுத்தேன். முதலில் ரூ.12.50லட்சத்தை 04.03.2021க்கும், பின்னர் ரூ.10லட்சத்தை 27.07.2021ம் தேதி கொடுத்தேன். விற்பனை ஒப்பந்த பத்திரம் 27.07.2021ம் தேதி ஏற்பட்டது. ரூ.12.50லட்சத்தை கொடுக்கும்போது நான் ஆதராம் வாங்கவில்லை. எந்த வகையில் ஆதராம் இல்லாமல் பணம் கொடுத்தேன் என்றால் விசாரித்தவகையில் அந்த அம்மாவை எல்லோரோரும் தவறாக இல்லை என்று சொன்னார்கள். ரூ.12.50லட்சம் கொடுத்தற்கு நான் கீதாவிடம் புரோநோட் எழுதிவாங்கினேன் என்றால் சரியல்ல. எனக்கு வடிவேல் என்ற நண்பர் கிடையாது. தாவாசொத்திற்கு உரிமையாளர்களாக 2மைனர்கள் இருக்கிறார்கள் என்று தெரிந்து தான் ஒப்பந்தம் போட்டேன். மைனர்களுக்கான கிரய தொகையில் என்ன செய்ய போகிறீர்கள் என்று நான் கேட்டானா என்றால் அவர்களுக்காக வேறு சொத்தை பாப்பாத்தியிடம் கிரயம் வாங்க போவதாக சொன்னார்கள். அடமானத்திற்காக பாப்பாத்தியிடம் கொடுத்த நிலத்தை திருப்பி மீட்டார்கள் என்றும், கிரயம் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நிலத்தை சீர்திருத்தம் செய்வது சம்மந்தமாக விற்பனை ஒப்பந்தத்தில் எழுதப்படவில்லை. வெறும் எழுத்தில்தான் சுவாதீனம் கொடுப்பதாக எழுதப்பட்டுள்ளது என்றும், உண்மையில் சுவாதீனம் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சுவாதீனத்தை எடுத்து அனுபவம் செய்து வருவதை

காட்டக்கூடிய ஆவணம் தாக்கல்செய்யவில்லை. விற்பனை ஒப்பந்த தேதிக்கு முன்பும், பின்பும் 1ம் பிரதிவாதி கீதா தான் சொத்தின் சுவாதீனத்தில் இருக்கிறார் என்றால் சரியல்ல. நிலத்தை பராமரிப்பு செய்வதற்கு 1ம் பிரதிவாதியிடம் அனுமதி வாங்கினேனா என்றால் அவர் பராமரிப்பு செய்து கொள்ள சொல்லிவிட்டார். நிலத்தை சீர்திருத்தம்செய்ய கீதா அனுமதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்ன காரணத்திற்காக வனத்துறைக்கு நான் தண்டம் கட்டினேன் என்பதற்கான ஆதாரத்தை நான் தாக்கல் செய்துள்ளேன். நான் வேறு வகையில் செய்த தவறுக்காக வனத்துறையிடம் செலுத்திய தண்டத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரியல்ல. நிலத்தை சீர்செய்வதற்கு மொத்தம் ரூ.15லட்சம் செலவானது. ரசீதுகளை ரூ.15லட்சத்திற்கு தாக்கல்செய்துள்ளேனா என்றால் JCB ஓட்டியதற்கான ரசீது தாக்கல்செய்துள்ளேன். மண்ஓட்டுவது, ஆள்கூலிக்கு ரசீது கிடையாது. எனக்கு பின்புலமாக இருக்கிறவரின் செல்வாகக்கை பயன்படுத்தி போலியாக பெறபட்ட ரசீதை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 16 3/4ஏக்கரை சீர்திருத்தம் செய்துள்ளேன். டிராக்டர் ஓட்டுவதற்கு எவ்வளவு செலவுசெய்தேன் என்றால் அவ்வப்போது காசு கொடுத்துவிடுவேன். அதற்கு ரசீது கிடையாது. நான் கூறுவது போன்று செலவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கில் கூறியுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். இந்த வழக்கில் மாற்றுபரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.